# நம்மாழ்வார்

16

பூ. அ. பாஷ்யம் ஐயங்கார், பி. ஏ., எல். டி.,
எழுதியது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
923

[விலை [illegible] அணா

Printed at
the 'Caxton Press'
Madras.

## பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆழ்வார்களின் அவதார மகிமை - - | 5 |
| 2. | திருவவதாரம் - - - - | 7 |
| 3. | ஆழ்வாரின் மோனநிலை - - - | 9 |
| 4. | ஆசாரிய தரிசனம் - - - | 12 |
| 3. | மதுரகவிகள் கண்ட காட்சி - - - | 13 |
| 6. | மதுரகவிகள் நம்மாழ்வாருக்குச் சீடராதல் - | 14 |
| 7. | நம்மாழ்வார்க்குப் பகவான் காட்சி அளித்தல் | 16 |
| 8. | நம்மாழ்வார் தன்னுடைச் சோதிக் கெழுந்தருளியது - - - - | 18 |
| 9. | ஆசாரிய பக்தி - - - - | 19 |
| 10. | சங்கத்தார் செருக்கு - - - | 19 |
| 11. | நம்மாழ்வார் மதுரகவிகளுக்குக் காட்சியளித்தல் - - - - - | 20 |
| 12. | சங்கத்தாரின் தோல்வி - - - | 21 |
| 13. | புலவர் கர்வமொழிந்து நலம்பெற்றமை - - | 22 |
| 14. | நம்மாழ்வாரின் பிரதாபம் - - - | 23 |

ஸ்ரீ

# நம்மாழ்வார்

## 1. ஆழ்வார்களின் அவதார மகிமை.

உலகத்திற் புண்ணியம் ஒடுங்கிப் பாபம் தலையெடுக்கும்போது உயிர்களைக் காப்பாற்றுவதற்காகப் பகவானே மனிதனாகப் பிறந்து நலம்புரிவதாக வாக்களித்திருக்கிறார். இராவணன், கரன் முதலிய கொடிய அரக்கர்கள் உலகத்திற்குப் பலவகையான தீமைகளைப் புரிந்து வந்தார்கள். அப்போது பகவான் அயோத்தியை ஆண்டுவந்த தசரதசக்கரவர்த்திக்குக் குமாரராய் அவதரித்து இராவணனோடு கடுமையான யுத்தம் செய்து அதில் எல்லா இராக்ஷதர்களையுங் கொன்று உலகத்தாரைக் காப்பாற்றினார். பின்பு கிருஷ்ணவதாரம் செய்து பாண்டவர்க்குச் சகாயமா யிருந்து துரியோதனன் முதலிய துஷ்டர்களையழித்து அர்ஜுனனுக்குக் கீதோபதேசம் செய்தருளினார்.

நாமெல்லோரும் பகவானுடைய குழந்தைகள்; அதனால் அவருக்கு நம்மிடத்தில் அளவுகடந்த அன்புங் கருணையும் உண்டு. ஸ்ரீவைகுண்டத்தில் வெகு சிறப்

போடு வீற்றிருக்கும் மகாவிஷ்ணு நம்மிடத்தில் அவ ருக்கு உள்ள அன்பின் மிகுதியால் இப் பாவபூமியில் நம்மைப்போல் ஒரு மனிதராய்ப் பிறந்து பல கஷ்டங் களுக்கு உட்படுகிறார்.

சில சமயங்களில் அவரே உலகில் வந்து ஜன்ம மெடுக்காமல் தம்முடைய தொண்டர்களை உலகத்திற் போய்ப் பிறந்து மனிதர்களைத் திருத்தி நல்வழிப் படுத் தும்படி கட்டளையிட்டு அனுப்புகிறார். கடவுளின் ஆணைப்படியே அப்பெரியோர் உலகில் வந்து அவதரிப் பார்கள். அவர்கள் நன்மை, தீமை இன்னவை என்று அறியாத மனிதர்களுக்கு, சாஸ்திரங்களைக் கற்பிப்பார் கள். அதனால் உலகத்திலுள்ள ஜனங்களும் அவர்களு டைய பக்தியையும் நடத்தையையுங்கண்டு அவர்களைப் போலவே நடந்து திருந்திக் கடவுளை அடைவார்கள்.

அப்படிப்பட்ட மகானுபாவர்களே, ஆழ்வார்க ளென்றும் ஆசாரியர்களென்றும் பேர்படைத்து விளங் கினார்கள். அவர்கள் பகவானது திவ்விய குணங்களி லேயே சதா ஆழ்ந்து சுகித்திருந்தார்கள். அதனால் அப் பெரியோர்க்கு ஆழ்வார்களென்று பெயருண்டா யிற்று. இப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த மகான்களிற் பலர் உலகத்திற் பிறந்து ஜனங்களுக்கு நல்ல மார்க் கங்களை உபதேசித்து ஆசாரியர்களென்றும் பெயர் பெற்று விளங்கினார்கள். அவர்கள் நமக்காகப் பல உயர்ந்த நூல்களை அருளிச்செய்திருக்கிறார்கள்.

அவர்கள் ஒழுகிவந்தபடியே நாமும் நடந்து நற் கதி யடைய முயலவேண்டும். அவர்கள் இயற்றிய நூல்களில் நமக்குப் போதிக்கும் விஷயங்களைச் சிரத் தையோடு படிக்கவேண்டும். அவற்றிற் சொல்லியிருப்

பதுபோல் நடக்கவேண்டும். அவர்கள் நமக்கு எவ்வளவோ அருமையான நன்மைகளைப் புரிந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களை நாம் எப்போதும் மறக்கலாகாது. அவர்களிடம், நாம் பக்தி யுடையவர்களாய் இருக்கவேண்டும். அத்தகைய பெருமைவாய்ந்தவருள் நம்மாழ்வாரென்பவரும் ஒருவர். இவர் மற்ற ஆழ்வார்களுக்கெல்லாம் தலைமை வாய்ந்தவர் என்று கூறுவர். இச் சிறு புத்தகத்தில் அவருடைய அற்புத சரித்திரத்தையே படிப்பீர்கள்.

## 2. திருவவதாரம்.

முற்காலங்களில் நாகரிகம் அமைந்திருந்த நாடுகளிற் பாண்டிநாடும் ஒன்று. அஃது ஒரு காலத்தில் மிக்க பெருமை அடைந்திருந்தது. அந் நாட்டில் திருக்குருகூர் என்னும் அழகிய நகர் ஒன்றுண்டு. அதற்குத் திருநகரி யென்றும் பெயர். அந்த ஊரின் சிறப்பையும், அதனை யடுத்துப் பாயும் தாமிரபரணியென்னும் நதியின் பெருமையையும் பல கவிகள் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்கள். அந் நகரில் எல்லா வளங்களும் நிரம்பியிருந்தன.

அத் திருக்குருகூரிலே பொற்காரியார் என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் ஒரு வேளாளர். அவருக்குத் திருமாலிடத்தில் பக்தி மிகுந்திருந்தது. அவர் எல்லா நற்குணங்கட்கும் உறைவிடம். அவர் உடைய நங்கையார் என்னும் உத்தமியை மணம் செய்துகொண்டார். அப் பெண்மணியின் தந்தையாரான திருவாழ்மார்பர் என்பவர் மலையமானாட்டில் திருவண்பரிசார மென்னும் பதியில் வாழ்ந்திருந்தார்.

திருவாழ்மார்பர் பொற்காரியாரைத் திருவண்பரிசாரத்திலேயே சிலகாலந் தங்கும்படி வேண்டினார். பொற்காரியாரும் தம் மாமனாரின் விருப்பத்திற்கிசைந்து தமது மனைவியோடு அவ்விடத்திலே சில வருஷங்கள் வசித்துவந்தார். பிறகு பொற்காரியார் தமது ஊருக்குத் திரும்பிப் போக விரும்பினார். அவர் திருவாழ்மார்பரிடம் விடைபெற்றுக்கொண்டு உடைய நங்கையாருடன் தமது ஊருக்குப் புறப்பட்டார்.

வழியில், பொற்காரியார் திருக்குறுங்குடியென்னும் ஊரை அடைந்தார். அப் பதியில் பெருமாள் கோயில் ஒன்று உண்டு. அவ்விடத்தில் எழுந்தருளியிருந்த திருமாலுக்கு நம்பி என்று பெயர். பொற்காரியார் தமது மனைவியுடன் சென்று அப் பெருமானை வணங்கி, “எம்பெருமானே! தேவரீருடைய கிருபையால் நாங்கள் நல்வாழ்வு வாழ்கின்றோம், ஆயினும், எங்களுக்கு வெகுநாளாக மனக்குறையொன்றுண்டு. பிள்ளையில்லாதவர்கள் நற்கதி யடைவதில்லை என்று பெரியோர் கூறுவர். விவாகமாகிப் பலவருஷங்களாகியும் எங்களுக்கோ புத்திரப்பேறு உண்டாகவில்லை. ஆகையால், தேவரீர் எங்களுக்குப் புத்திரசந்தானம் அருள்புரியவேண்டும்” என்று உருக்கத்துடன் பிரார்த்தித்தார்; தம் பக்தர்கள் வேண்டும் வரங்களைக் கருணையோடு கொடுக்கும் பகவானும் பொற்காரியாரைக் குளிரநோக்கி, “அன்பனே! இதற்காக நீ மனவாட்ட மடையவேண்டாம்; நாமே உமக்குப் புதல்வனாக வந்து பிறக்கிறோம்” என்று அர்ச்சகர் மூலமாய்த் தம் திருவுள்ளத்தை வெளியிட்டு வரங் கொடுத்தார். பொற்காரியார் அக் கோயிலார் செய்த மரியாதைகளைப் பெற்றுக் களிப்போடும் அந்தப்

பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு திருநகரிக்குப் போய்ச் சேர்ந்தார்.

நாளடைவில் உடைய நங்கையாரும் கருப்பமுற்றுப் பத்து மாதங்கள் கழிந்ததும் ஓர் அழகிய ஆண் மகவைப் பெற்றார். பகவானே உலகில் வந்து குழந்தையாக அவதரித்தார். ஆகையால், அவருடைய பெருமை இப்படிப்பட்டது என்று சொல்லவேண்டுமோ? இப் பிள்ளைப் பெருமானே உலகில் வந்து அவதரித்த ஆழ்வார்களிற் சிறந்தவர். இஃது இங்ஙனமாக, பரமபதத்தில் ஸ்ரீமந் நாராயணனுக்கு இடைவிடாது பக்தியுடன் திருத்தொண்டுசெய்யும் அனந்தாழ்வானென்னும் ஆதிசேஷனவர், பரமபதநாதன் உலகில் நம்மாழ்வாராகப் பிறந்த போதும் அவருக்குப் பணிசெய்ய விரும்பினார். அதனால் அவர் திருக்குருகூரில் ஓர் அற்புதப் புளியமரமாகத் தோன்றி வளர்ந்திருந்தார்.

## 3. ஆழ்வாரின் மோனநிலை.

பொற்காரியார், தமக்குப் பிறந்த அருமைத் திருக்குழந்தையைக் கண்டு அளவில்லாத ஆநந்தங்கொண்டார்; ஆயினும் அக் குழந்தை மற்றைக் குழந்தைகளைப்போல் இராமையால் பெற்றோர் கவலையடைந்தனர். பிறந்ததுமுதல் அது பால்குடியாமலும் அழாமலும் சிரியாமலும் எப்போதும் மௌனத்தோடுகூடியிருந்தது. ஆகாரம் ஒன்றும் இல்லாதிருந்தும் குழந்தையோ நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வந்தது. 'இஃதென்ன அற்புதம்! இப்படியும் ஒரு குழந்தை இருக்குமோ? யாவும் எம்பெரு

மான் செயல். இஃது அவன் திருவிளையாட்டே என்று பெற்றோர் அதிசயித்தனர்.

பொற்காரியார், குழந்தையை அவ் வூரிலுள்ள பெருமாள்கோயிலுக்கு எடுத்துச் சென்றார். அவர் கடவுளை வணங்கி, "ஸ்வாமி, இச்சிசு எனக்குப் பிறக்கும்படி நீரே அருள்புரிந்தீர். இக்குழந்தையின் நடத்தையோ அதிக விசித்திரமாயிருக்கிறது. தேவரீருடைய திருவுள்ளத்தை எங்களால் அறிய முடியுமோ? தேவரீரே இக் குழந்தையாகப் பிறந்திருப்பதால் இதனைக் காப்பாற்றுவதும் தேவரீர் பொறுப்பேயாகும். உலக நடைக்கு முற்றிலும் மாறான நடத்தையோடு கூடியிருப்பதால் இதற்கு மாறன் என்று பெயரிட்டு இதைத் தேவரீரிடமே ஒப்பித்து விடுகிறேன்" என்று சொல்லி அருகேயிருந்த புளியமரத்தடியில் ஓர் அழகிய தொட்டிலில் இட்டுத் தம் இருப்பிடம்போய்ச் சேர்ந்தார்கள்.

அக் குழந்தை மற்றைக் குழந்தைகளைப்போல் அழாமலும் உண்ணாமலும் நகையாமலும் பேசாமலும் இருந்ததற்குக் காரணம் என்ன? அது தெய்வக் குழந்தையன்றோ? தாய்வயிற்றில் இருக்கையில் குழந்தைகளின் மனம் அறிவுமயமாயும் சுத்தமாயும் இருக்கும். வயிற்றை விட்டு வெளியே வந்தவுடன் குழந்தைகளின்மேல் சடமென்னும் வாயு வீசும். உடனே குழந்தைகளின் பரிசுத்தமான மனம் மாறிவிடும். அதனால்தான் அவை பிறந்த பிறகு அழுவதும் துன்பப் படுவதுமாய் ஆகிவிடுகின்றன. அக் கொடிய காற்று பிறந்தவுடன் மாறனையும் பற்றத் தொடங்கியது. ஆனால் அது தெய்வத் திருக் குழந்தையை என்ன செய்ய முடியும்? அது தன் முழு வலியையும் அக் குழந்தையினிடங் காட்டியும் பயன்பட

வில்லை. ஞான ஸ்வரூபியான மாறனார் அக்காற்று தம்மை அணுகாதபடி அதைக் கடிந்து ஓட்டி விட்டார். அதனால் அவருக்குப் பசி, தாகம் முதலியன உண்டாகவில்லை; மாறன் அழாமலும் அரற்றாமலும் மௌனம்பூண்டிருந்தார். இப்படிச் சடவாயுவை அவர் அவமானப்படுத்திக் கோபித்தபடியால் அவர்க்குச் சடகோபரென்று ஒரு புதிய பெயர் உண்டாயிற்று.

பரமபத நாதன் திருவருளால் அவதரித்த மாறனார் பதினாறுவருஷங்கள் இவ்விதம் கண்விழியாமல் மௌனமாய் வளர்ந்து வந்தார். அவர், தமக்கு ஆகாரம் வேண்டுமே யென்று கவலைப் பட்டவரே யல்லர். அவருக்கு வேறு ஏதேனுங் குறைகள் ஏற்பட்டதுண்டோ? ஒன்றுமில்லை. அவரது மனம் உலகத்திலுள்ள பொருள்களுள் எதனிடத்தேனும் சென்றதோ? இல்லை. பொருள்கள் யாவும் தோன்றுவன போல்தோன்றிச் சிலநாளிருந்து பின் அழியுந்தன்மையுடையனவாம். அற்பர்க்குத்தாம் இவற்றில் ஆசை மிகுதியாய்த் தோன்றும். மாறனார் ஒரு பெரிய ஞானி; ஆகையால் அவருக்கு ஒன்றிலும் பற்றில்லை. இன்பம் துன்பம் இரண்டும் அவருக்குச் சமமே. அவருடைய இருப்பைக் கண்டு ப[illegible]கைத்தனர். பலர் அவரைப் பித்தம் பிடித்தவ[illegible]ம் ஊமையென்றும் பழித்தார்கள். அம்மொழிகளை அவர் காதுகொடுத்துக் கேட்டிலர். அவருடைய பெற்றோர் அவர் நிலையைக் கண்டு மிகவும் வருத்தமுற்றனர். "ஐயோ! நாம் என்ன பாவஞ் செய்தோமோ? கடவுள் இவ்வாறு நம்மைத் தண்டிக்கிறார்" என்று அவருடைய பெருமையைச் சிறிதும் அறியாமல் துக்கித்தார்கள்.

## 4. ஆசாரிய தரிசனம்.

ஸ்ரீவைகுண்டத்தில் மகாவிஷ்ணு பிராட்டிசமேதராய்த் தம் அடியவரோடும் வெகு சிறப்பாய் எழுந்தருளியிருக்கிறார். அவரைச் சதா தரிசித்து ஆநந்தமடையும் பாக்கியத்தை அடியவர்களே பெற்றிருக்கின்றனர். அடியவர் ஞானத்திலும் பக்தியிலும் நிகரற்றவர்கள். அவர்கள் அநுபவிக்கும் இன்பத்திற்கு எப்போதும் அழிவு கிடையாது. இந்திரபதவியுட்பட்ட மற்ற எல்லாச் சுகங்களும் நசிப்பனவாம். ஆனால் எம்பெருமானிடத்தில் பக்தியுடையவரோ என்றும் சுகத்தையே அடைந்து இன்புறுவர். தேவர்களினும் அதிகமான மகிமையோடுகூடிய அப்பெரியோர்க்கு நித்திய சூரிகளென்று பெயர். மனிதர் தம் நற்குண நற்செய்கைகளாலும் விஷ்ணு பக்தியின் பிரதாபத்தாலும் இறந்தபின் வைகுந்தலோகம் சென்று நித்யசூரிகளைப் போல் திருமாலுக்குத் திருத்தொண்டுசெய்து மகிழும் பேற்றினை யடைவர். இத்துணைச் சிறப்புவாய்ந்த பெரியோரையே, பரமன் உலகத்திலுள்ள ஏழை ஜனங்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதற்காக அனுப்பி யருள்வர்.

மாறனார்க்குக் கைங்கரியம் புரிவதற்காக ஆதிசேஷனே திருக்குருகூரில் புளியமரமாய் அவதரித்தாரென்று முன்னமே பரிசுத்தால்லியிருக்கிறோ மன்றோ? அப்புளிய மரத்தடியின் கீழேதான் சடகோபர் பதுமாசனங்கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் மீது வெயில்படாமலும் மழைத்துளி வீழாமலும் ஆதிசேஷன் காத்துவந்தார்.

விஷ்வக்ஸேன ரென்பவர் நித்யசூரிகளுள் முதன்மையானவர். எல்லா வேதங்களையும் கலைகளையும்

சந்தேகமறத் தெளிந்தவர். அதனால்தான் அவர் விஷ்ணுகணங்களுக்குத் தலைமைப்பதவியை வகித்து வந்தார். வாலிபரான மாறனுக்குப் பகவான் எல்லாச் சாஸ்திரங்களையும் அறிவிக்கத் திருவுள்ளங்கொண்டார். உடனே தமது கணத்தலைவரான விஷ்வக்ஸேனரை விளித்து, 'நீ திருக்குருகூரிலிருக்கும் மாறனென்னும் பாலபக்தனுக்கு வேதாந்தத்தின் பொருள்களை உபதேசித்து வா' என்று அனுப்பினார்.

விஷ்வக்ஸேனரும், பரமபத நாதன் ஆணையைச் சிரமேல் தாங்கி உடனே திருக்குருகூரில் யோகத்தில் எழுந்தருளியிருக்கும் சடகோபமுனிவர் கண்களுக்குப் பிரத்தியக்ஷமானார். தமக்குப் பெரிய நிதி கிடைத்ததுபோல் மாறனார் மகிழ்ந்தார். விஷ்வக்ஸேனரும் அவரைக் குளிர நோக்கி, வேதம் முதலிய எல்லா நூல்களையும் அவருக்குக் கற்பித்தார். மாறனாரும் ஆசாரியனிடமிருந்து அருமறைகளை எளிதில் அறிந்தார். விஷ்வக்ஸேனர் தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

## 5. மதுரகவிகள் கண்ட காட்சி.

திருக்குருகூரில் இவ்வளவு சிறப்போடும் சடகோபர் எழுந்தருளி யிருக்கையில், திருமாலைத்தவிர வேறொரு தெய்வத்தையும் நாடாத ஒரு வைஷ்ணவர் திவ்யதேசங்கள்தோறுஞ் சென்று ஆங்காங்குள்ள எம்பெருமான்களைச் சேவித்துக் காலங்கழித்து வந்தார். அவர், தாம் வணங்கித் தொழும் எம்பெருமான்களின் குணங்களை வியந்து இன்கவிகள் பாடிக் காலங் கழித்து வந்தார். அதனால் அவர் மதுரகவிகள் என்னும் பேர் பெற்றார். அவர் அயோத்திக்குச் சென்று ஸ்ரீராம

பிரானைச் சேவித்தார். அவ்விடத்தில் சிலகாலம் வசிக்க வேண்டுமென்னும் எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அவர் அவ்வாறே அயோத்தியில் ஜானகீரமணனைத் தொழுதுகொண்டிருந்தார்.

ஒருநாள் இரவில் தெற்குத் திக்கிலிருந்து பேரொளியொன்று வீசியதை மதுரகவிகள் கண்டார். அதைக் கண்டு அவர் மிகவும் வியப்படைந்தார். அருகில் உள்ள கிராமங்களில் தீப்பிடித்து எரிகின்றதோ அல்லது காட்டுத் தீயினால் உண்டான பெருஞ் சோதியோ என்று எண்ணினார். மறுநாளிரவும் மதுரகவியாழ்வார் அதே திசையில் அப் பேரொளியைக் கண்டார். அதன் காரணம் அறிய முடியாமற் போயிற்று. மூன்றாவது தினத்திலும் அதே காட்சியைக் கண்டு மிக்க வியப்பை யடைந்தார். அவர் அவ்வொளியின் மூலத்தை அறிய விரும்பினார். எப்படியாவது அதனை ஆராய்ந்து அறிய வேண்டுமென்று அவர் நிச்சயித்தார். உடனே அவ் வெளிச்சத்தையே குறியாகக்கொண்டு அயோத்தியினின்றும் அவர் புறப்பட்டார். அவர் சலியாமல் நெடுவழி நடந்து நதி, வனம், மலை முதலியவற்றைக் கடந்து வந்தார். தமக்கு முன் வீசிய ஒளியைத் தினந்தோறும் கண்டு அத்திக்கை நோக்கிப் பலகாலம் நடந்தார்

## 6. மதுரகவிகள் நம்மாழ்வாருக்குச் சீடராதல்.

அங்ஙனம் ஆழ்வார் நடந்து திருநகரி வந்து சேர்ந்தார். வழக்கமாய்க் காணும் தெய்வவொளியானது அன்றைய இரவு அவரது கண்ணுக்குப் புலப்படவில்லை; ஆகையால் அவ் வொளிக்குக் காரணப்

பொருள் அவ்வூரிலேதான் இருக்கவேண்டுமென எண்ணினர். அவர் அப்பதியைச்சுற்றி வருகையில் புளியமரத்தின் கீழ் ஒரிளையவர் கண்மூடி யோகத்தில் இருப்பதைக் கண்டு களிப்புற்றார். முதலில் அவ்வுருவத்திற்கு உயிர் உண்டோ இல்லையோ என்று அறிய விரும்பி அவர் அருகில் ஒரு கல்லை யெடுத்தெறிந்தனர். கல்லோசையைக் கேட்ட மாறனார், தமது திருக்கண்களை விழித்துப் பார்த்தார். உடனே மதுரகவிகள் ஆநந்த பரவசரானார். தாம் பல நாள்களாகத் தரிசித்து வந்த ஒளி இவருடைய திருமேனியின் காந்தியே யென்று தேறினர். அவர் அவ்விளைஞருக்கு ஞானமுண்டோ வென்று அறிய விரும்பினர். அவர் மாறனாரைநோக்கி இரண்டொரு கேள்விகள் கேட்க மாறனார் வாய்திறந்து தகுந்த விடை பகர்ந்து மதுரகவிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார். இதுவரை கண்விழியாமலும் பேசாமலும் இருந்தவர் தம்மைப் போன்ற அடியவரைக் கண்டவுடன் அவரைப் பார்த்து உரையாடினார். பெரியோர்களின் மனம் தம்மைப் போன்ற அறிவினரைக் கண்ட மாத்திரத்தில் கனிந்துருகும் தன்மை வாய்ந்தது. தம்மைப்போன்ற பேரறிவும் தெய்வத் திருவருளும் பெற்றவரைக் கண்டவுடன் சடகோபர் களிப்படைந்தார்.

மதுரகவிகளோ, 'இன்றுதான் நான் பிறவிப் பயன் அடைந்தேன்; நற்கதி பெற்று உய்ந்தேன். என் ஆசாரியமூர்த்தியைக்காணும் பாக்கியத்தை நினைக்குந்தோறும் என் உள்ளம் உருகுகின்றது. என்னை ஆட்கொள்ள எழுந்தருளிய பரமகுருவே என்னைக் காத்து அருள் புரிய வேண்டும்' என்று தம்

கண்களில் நீர் ஆறுய்ப் பெருக மாறனின் திருவடிகளே தஞ்சமென்று அவரது மலர் அடிகளில் விழுந்து பணிந்தார். உருவில் சிறியவரேனும் ஞானம், பக்தி, விரக்தி முதலிய அருங்குணங்களுக்கு உறைவிடமன்றே மாறனர்? பிறக்கும்போதே அஞ்ஞானம் தம்மை அணுகவொட்டாது தரத்திய மகானன்றே அவர்? தம்மைச் சரணக வந்து அடைந்த மதுரகவிகளை அவர் பரிவுடன் நோக்கி அவரைத் தம்முடைய சிஷ்யராகத் திருவுள்ளம் பற்றினர். மதுரகவிகளும் அவரிடமிருந்து வேதங்களை அறிந்தார்.

## 7. நம்மாழ்வார்க்குப் பகவான் காட்சி அளித்தல்.

பின் மாறனர் மதுர கவிகளுக்கும் அவர் மூலமாய் உலகத்தாருக்கும் பேருபகாரஞ் செய்யத் தொடங்கினர். அச் சமயத்தில் மகாவிஷ்ணு, பிராட்டி சமேதராய்க் கருடவாகனத்தின்பேரில் ஆழ்வாருடைய ஞானக்கண்களின் எதிரில் தோன்றினர். உடனே மாறனர் அக் கார்வண்ணனை மனமாரச் சேவித்து உள்ளம் பூரித்தார். அதேகாலத்தில் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களெல்லாரும் திரண்டுவந்து ஆழ்வாருக்குச் சேவை சாதித்தார்கள். அப்போது மாறனரது மனம் அடைந்த நிலையை என்னென்று சொல்வது! இதனினும் மேலான இன்பம் வேறென்றுண்டோ? தமது ஆசாரியரது கருணையால் தமக்கும் இப்பெரும் பாக்கியம் வாய்த்ததற்காக மதுரகவிகளும் ஆச்சரியத்தாலும் களிப்பாலும் தமது மெய்ம்மறந்து நின்றார்.

பகவானை எளிதில் தரிசிக்கும் புண்ணியம் பெற்றிருந்த சடகோபரும் உடனே பாடத் தொடங்கினார். அவர் இயற்றிய பாக்களின் பெருமையையும் உயர்வையும் பாராட்டாதவர்கள் கிடையாது. வடமொழியில் அனாதியாய் விளங்கிவந்த நான்கு வேதங்களின் பொருளையேஇவருடையபாடல்களும்கொண்டுள்ளன. அதனால் வேதத்துக்குள்ள மகிமை சடகோபர் இயற்றிய பிரபந்தங்களுக்கும் உண்டு. இருக்கு, யஜுஸ், அதர்வணம் என்னும் மூன்று வேதங்களின் அர்த்தத்தை முறையே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி' என்னும் மூன்று தமிழ்ப் பிரபந்தங்களாக இயற்றி, முடிவில் வேதங்களுள் சிறந்த சாம வேதத்தின் உண்மைப் பொருளைத் திருவாய்மொழி என்னும் நூல் மூலமாயும் மாறன் அருளிச்செய்தார். திருவாய்மொழியே எல்லாப் பிரபந்தங்களினும் சிறப்பு வாய்ந்தது. அதனால் அதற்குப் பகவத் விஷயம் என்னும் ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. பகவத் விஷயத்தை அர்த்தத்துடன் அறிந்தவன் வேதத்தை அறிந்தவனாவான். வடமொழியிலுள்ள வேதங்களைச் சகலரும் அறிந்து மேன்மை யுறுவதற்குச் சடகோபர்காட்டிய கருணையை என்னென்று சொல்வது! வேதப்பொருளை விரித்துரைத்த புனிதராகிய சடகோபரைச் சொந்தமாகப் பாராட்டி, எல்லாரும் அவரை 'நம்ஆழ்வார்' 'நம் ஆழ்வார்' என்று புகழ்ந்து கௌரவித்தார்கள். அதனால் அவருக்கு நம்மாழ்வார் என்னும் பெயரே உலகத்தில் நிலைத்து நின்றது. மேலும் ஸ்ரீரங்கநாதரே சடகோபரை நம்மாழ்வார் என்று பெருமைப் படுத்திக் கூப்பிட்டார். இவ்வளவு பெருமை வாய்ந்த நம்மாழ்வாரே மற்ற ஆழ்வார்களை

விட மேலானவராக விளங்கினர். அதனல்தான் இவருக்கு மற்ற ஆழ்வார்களை அவயவங்களாகக் கூறு கிறார்கள். இவர் அவ்வவயவங்களோடு கூடிய ஒரு திவ்விய புருஷர் ஆவர்.

பகவான் ஆழ்வாருடைய பாடல்களைக்கேட்டு இன்புற்றார். அவர் ஒருமகிழமாலையை எடுத்து அவருக் குக்கொடுத்து அணியும்படி பணித்தார். கடவுள் அளித்த மகிழம்பூ மாலையைத் தரித்ததனல் அவ ருக்கு வகுளாபரணர் என்று ஒரு பெயருண்டாயிற்று. அவருடைய பிரதாபத்தைக் காணவந்த நித்யசூரிக ளூட்பட்ட எம்பெருமான்கள் எல்லாரும் ஆழ்வாரை வாழ்த்தித் தத்தம் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

## 8. நம்மாழ்வார் தன்னுடைச் சோதிக் கெழுந்தருளியது.

பிறகு நம்மாழ்வார் தாம் அருளிச்செய்த பிரபந் தங்களை மதுரகவிகளுக்கு உபதேசித்தார். மதுரகவி களும் திருக்குருகூர் நம்பியாகிய நம்மாழ்வாரைவிட் டுப் பிரியாமல் அவருக்குத் திருத்தொண்டுகள் புரிந்து வந்தார். நம்மாழ்வார் மகா விஷ்ணுவே முதல்தெய்வ மென்று நிரூபித்துப் பிறமதங்களைக் கண்டித்துவந்தார். அதனல் அவருக்குப் பராங்குசர் என்று ஒரு பெயர் உண்டாயது. யானையை அடக்கும் மாவெட்டி என் னுங் கருவிக்கு அங்குசமென்று பெயர். ஆழ்வார் பிற மதங்களாகிய யானைகளைத் தம் மதமாகிய அங்குசத் தால் அடக்கி வந்தாராதலால் அப் பெயர் பெற்றனர். நம்மாழ்வார் முப்பத்தைந்து வருஷங்கள் வாழ்ந்திரு ந்து பின்பு விதேகராய்த் திருநாடு அலங்கரித்தனர்.

## 9. ஆசாரிய பக்தி.

நம்மாழ்வாருடைய பிரிவிற்கு மதுரகவிகள் சிறிதும் ஆற்ருமல் மிகவும் வருந்தினர். அவருடைய வருத்தம் எளிதில் நீங்கவில்லை. அப்பால் அவர் நம்மாழ்வார் அருளிச்செய்த பாடல்களை இசையோடுந் தாளத்தோடும் பாடிக் காலங் கழித்து வந்தார். அவர் நம்மாழ்வாரைத் தியானித்து அநுசந்தானம் பண்ணுத வேளையே கிடையாது. அவர் நம்மாழ்வாரின் பெருமையை உலகத்தார்க்கு அறிவிக்க விரும்பினர். ஆகையால் அவர் நம்மாழ்வார் விஷயமாகப் பாசுரங்கள் பாடி ஒரு சிறிய பிரபந்தத்தை முடித்தார்.

மதுரகவிகள் நம்மாழ்வாரிடம் வைத்திருந்த பக்தி அதனேடு நிற்கவில்லை. திருநகரியில் ஒரு கோயில் கட்டி அதில் மதுரகவிகள், நம்மாழ்வாரின் விக்கிரகத்தை எழுந்தருளப்பண்ணினர். ஆழ்வாருக்கு ஒரு வித குறையுமின்றி திருவிழாக்கள் நடத்தி மதுரகவிகள் காலங் கழித்து வந்தார்.

## 10. சங்கத்தார் செருக்கு.

ஒருநாள் நம்மாழ்வாரின் விக்கிரகத்தை வீதியில் எழுந்தருளப் பண்ணுகையில் வழக்கம்போல் முன்னே விருதுகூறிச் செல்வோர், 'வேதந் தமிழ் செய்த வேதியர் வந்தார்! திருமாலன்பராம் தெய்வப்புலவர் வந்தார்! அறிவில் முதிர்ந்த ஆரியர் வந்தார்!' என்று பலவகையாக ஆழ்வாருடைய பெருமைகளைச் சொல்லிக்கொண்டே போனர்கள்.

அதைக் கேட்டுச் சிலர் பொறாமை யடைந்தனர். ஆழ்வாரின் பெருமையைச் சிறிதும் அறியாத சிலர் தமக்குள்ள கல்வியால் செருக்குற்று விருதுகூறிச் செல்வோரைத் தடுத்து, "நீங்கள் தெய்வப் புலவரென்று உங்கள் ஆழ்வாரை எப்படிச் சொல்லலாம்? அவர் சாமான்ய பக்தர்தானே, நீங்கள் கூறுவதுபோல் அவர் அவ்வளவு பெருமை வாய்ந்தவரல்லர். நாங்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்கள். நாங்கள் இயற்றிய நூல்கள் சங்கத்தார் முன்னிலையில் அரங்கேறப் பெற்றிருக்கின்றன. நம்மாழ்வாருக்கு எங்களுக்குள்ள பெருமை உண்டோ? அவருடைய திருவாய்மொழி, சங்கமேறிய நூல் அல்லவே, ஆகையால், இனி நீங்கள் இப்படி விருதுகள் கூறிச் செல்லுதல் தகாது". என்று கூறினார்கள்.

அதை யறிந்த மதுரகவிகள் மனவாட்ட மடைந்தார். 'அவர்களுடைய கர்வத்தை அடக்கும் வழி இன்னதென்று தேவரீரே அருள் புரியவேண்டும்' என்று சிந்தித்து நம்மாழ்வாரைத் தியானித்தார்.

## 11. நம்மாழ்வார் மதுரகவிகளுக்குக் காட்சி யளித்தல்.

உடனே நம்மாழ்வார் ஒரு விருத்த வேதியர் வடிவந் தாங்கி மதுரகவிகளுக்குச் சேவை சாதித்தார். மதுரகவிகளை அக் கிழப் பிராமணர் தேற்றி, 'நீர் சிறிதும் அஞ்ச வேண்டாம். நான் சொல்வதுபோற் செய்யும். திருவாய் மொழியிலுள்ள,

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே'

என்னும் பாசுரத்தின் முதல் அடியை ஒரு சிறிய ஏட்டில் எழுதிக் கொண்டுபோய் அவ் வேட்டை அவர்கள் வைத்திருக்கும் சங்கப் பலகையின்மேல் வைக்க அநுமதி பெறுவீராக. அவர்கள் அதற்கு இணங்குவார்கள். அதனால் அவர்கள் அவமானம் அடைவார்கள். அவர்களுடைய செருக்கும் அடங்கும்' என்றுகூறி மறைந்தனர்.

## 12. சங்கத்தாரின் தோல்வி.

மதுரகவிகளும் சங்கத்தாரிடம் தமது கருத்தை வெளியிட்டனர். அவர்களும் அதற்கு இசைந்தார்கள். மதுரகவிகள் 'கண்ணன் கழலிணை' என்னும் திருவாய்மொழிச் செய்யுளின் முதலடியை ஓரேட்டில் எழுதி சங்கப் பலகையில் வைத்தார். அவ்வேட்டுடன் பொற்றாமரைப் பொய்கையில் விடப்பட்ட அப் பலகையின் மேல் சங்கப்புலவர்களும் ஏறி நின்றார்கள். உடனே பலகை தண்ணீரில் மூழ்கிவிட்டது. புலவர்கள் நீரில் அமிழ்ந்து தத்தளித்தார்கள். அவர்களைத் தள்ளியவுடன் பலகை அந்தச் சிறிய ஏட்டை மாத்திரம் ஏந்திக்கொண்டு மறுபடியும் தண்ணீரின்மேல் மிதந்தது. அவ் வதிசயத்தைக்கண்ட யாவரும் ஆழ்வாரின் பெருமையைக் கொண்டாடினார்கள். குளத்தில் அமிழ்ந்த புலவர்கள் தட்டுத்தடுமாறி நீந்திக் கரை சேர்ந்தார்கள். உடனே அவர்கள் தம் கர்வம் ஒழிந்து, "ஆழ்

வார் பிறர் கற்பியாமலே எல்லாமறிந்தவர் என்று சிறிதும் உணராமற் போனேமே! எங்கள் பேதைமை யை என்னென்று கூறுவது! பகவானுடைய கிருபை யைப் பெற்ற ஆழ்வாருக்குமுன் நாங்கள் எம்மாத் திரம்? எங்களுக்குள்ள பாண்டித்தியம் மனுஷ்யப் பிரயத்தனத்தால் உண்டாயது. ஆழ்வாருடைய கவித் திறமையோ தெய்விகமாய் இயல்பிலேயே அமைந்தது. இந்த வித்தியாசம் அறியாமல் நாங்கள் அவரைப் பழித்துக் கூறினேமே! என்ன செய் வோம்! இந்த அபசாரத்தினின்றும் நாங்கள் எப்படித் தப்பிப் பிழைப்போம்!' என்று மனம் வருந்தினர்கள்.

## 13. புலவர் கர்வமொழிந்து நலம்பெற்றமை.

அப் புலவர்களில் ஒவ்வொருவரும் தனித்தனியே நம்மாழ்வாரின் பெருமையைக் கொண்டாடி ஒவ் வொரு பாசுரம் எழுதினர்கள். பின்பு அப் பாடல் களைப் படித்துப் பார்க்கையில் யாவும் ஒரே பாடலாக அமைந்திருந்தன. அவர்கள் யாவரும்,

'சேமங் குருகையோ? செய்ய திருப்பாற்கடலோ?
நாமம் பராங்குசமோ? நாரணமோ? — தாமம்
துளவோ? வகுளமோ? தோளிரண்டோ? நான்கு
முளவோ? பெருமா னுனக்கு.'

என்ற ஒரே பாடலை எழுதியிருந்தனர்.

அதைக்கண்டு அவர்கள் அதிசயித்து 'இப்படியும் உண்டோ? இஃது என்ன அதிசயம்! இவ் வற்புதத்தை எங்குங்கண்டிலோம். நாம் இவர் பெருமையறியாமல் மயங்கிக் குதித்தோமே' என்று இரங்கி வருந்தினர்கள்.

'ஆகாயமெங்கும் பறந்து சஞ்சரிக்கும் கருடனு டைய வேகமெங்கே? அற்பப் பறவையாகிய ஈயின் வேகம் எங்கே? உலகத்திற்கு ஒளிதரும் சூரியன் கதிரொளி எங்கே?' மின்மினியின் சிறு ஒளி எங்கே? புலியோட்டத்தின் முன் நாயோட்ட மெவ்வளவு? சிங்கத்தின் கம்பீர நடையினைக் கண்டு நரியும் அவ் விதமே நடக்க முயலுதல் நகைப்பிற் கிடமன்றோ? அழகிற் சிறந்த ஊர்வசியென்னும் தேவமாதின் ஆட் டத்திற்கும் பேயாட்டத்திற்கும் எவ்வளவு பேதம் உண்டு?"என்று வருந்தி" உலகில், தமக்கிணையொருவர் இல்லை யென்று கர்வித்துப் பெருமை பாராட்டும் வித் துவான்களின் கவிகள் சடகோபரின் அருளிச்செயல் களிலுள்ள ஒரு சொல்லின் பெருமையை உடையன வாக மாட்டா' என்னும் பொருள்பட

'ஈயாடுவதோ கருடற்கெதிரே? இரவிக்கெதிர்
மின்மினி யாடுவதோ?
நாயாடுவதோ உறுவெம்புலிமுன்?
நரிகேசரிமுன் நடையாடுவதோ?
பேயாடுவதோ அழகூர்வசிமுன்? பெருமான்
வகுளாபரணன் அருள்கூர்ந்து
ஓவாதுரை ஆயிரமாமறையின் ஒருசொற்
பெறுமோ உலகிற்கவியே?'

முதலிய பலபாடல்கள்பாடி ஆழ்வாரைத் துதித் தார்கள்.

## 14. நம்மாழ்வாரின் பிரதாபம்.

மதுரகவிகளும் தம் வாழ்நாள் முழுதும் நம்மாழ் வாருக்கு உற்சவங்களைக் குறைவற நடத்திக்கொண்டும் அவருடைய பிரபந்தங்களைப் பாராயணஞ் செய்து

கொண்டும் வாழ்ந்திருந்து பின்னர்ப் பேரின்ப வீட்டை யடைந்தார்.

பிற்காலத்திலும் கவிபாடுதலிற் சிறந்த வன்மை யுடைய கம்பரும் சடகோபருடைய பெருமைகளைக் கொண்டாடி அவரது அருநூல்களைப் பக்தியோடும் சிரத்தையோடும் பயின்று அவர் விஷயமாக அந்தாதி யொன்று பாடியிருக்கிறார்.

நம்மாழ்வார் அவதரித்துப் பல்லாண்டுகள் சென்றபின் திருவள்ளுவர் என்னும் பெயரினையுடைய தெய்வப்புலவர் ஒருவர் தோன்றினார். அவர் மறை நூல்களிலுள்ள அரும்பொருள்களைத் தொகுத்துத் திருக்குறளென்னுஞ் சிறந்த நூல் ஒன்றை இயற்றினார். அந் நூலில் அடங்காத உண்மைப் பொருள்களே கிடையாவாம். அதனால் எல்லா மதத்தினரும் அந் நூற் சிறப்பைக் கொண்டாடி தத்தம் பாஷைகளில் அதை மொழி பெயர்த் தெழுதி யிருக்கிறார்கள். எம் மதத்தினரும் எக்காலத்தும் அனுசரிப்பதற்குச் சாதன மான பொது நீதிகளையும் தர்மங்களையும் திருவள்ளு வர் அவ் வழகிய நூலில் செவ்விய குறள் வெண்பாக் களாற் பாடியிருக்கிறார். அவர் காலத்து விளங்கிய புலவர்களிற் பலர் அந் நூற் பெருமையை அங்கீகரித்துச் சாற்றுக்கவிகளால் அதன் சிறப்பினைக் கொண்டாடி யிருக்கின்றனர்.

திருவள்ளுவருடன் நெருங்கிப் பழகிய புலவர் களுள் ஔவையாரும் இடைக்காடரும் ஒருநாள் திருக் குறளின் அருமையைப் புகழ்ந்து திருவள்ளுவருடன் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்போது திருவள்ளு வர் அவ் விருவரையும் நோக்கி, "அகத்தியரால் உலகிற்

குப் பிரசித்தம் பண்ணப்பட்ட இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும், என்னால் செய்யப்பட்ட குறளும் உடையநங்கையாரின் திருக் குமாரராகிய சடகோபர் அருளிச்செய்த திருவாய் மொழியின் வழி நாலே யன்றி வேறல்ல'' என்னும் பொருளடங்க,

''குறுமுனிவன் முத்தமிழும் என்குறளும் நங்கைச்
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்.''

என்று பாடினர்.

அங்ஙனம் அவர் கூறியதை ஆமோதித்து ஔவையும், 'அர்த்த பஞ்சகத்தையும் புருஷார்த்தங்கள் நான்கினையும் முப்பொருளினடக்கி அமைக்கப்பட்ட மேலான உண்மைப் பொருளை, குளிர்ச்சி பொருந்திய தாமிரபரணி தீரத்திலிருக்கும் திருக்குருகூரில் காரியார்க்குப் புதல்வராய் அவதரித்த நம்மாழ்வாரது திருவாய்மொழியாகிய திராவிட வேதமென்று உலகிற் சிலர் வழங்குவர். நான் அவர்கள் சொல்லை மறுத்து அதனைத் தாய்மொழியிலுள்ளதான கீர்வாண வேதமென்றே சொல்வேன்' என்னுங் கருத்தை உள்ளிட்டு,

'ஐம்பொருளும் நாற்பொருளும் முப்பொருளிற் பெய்தமைத்த
செம்பொருளை எம்மறைக்கும் சேட்பொருளைத் — தண்குரு
சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின் [கூர்ச்
தாய்மொழிய தென்பேன் தகைத்து'

என்று கூறினர்.

அப்போது இடைக்காடர், ஔவையார் கூறியதை யொட்டியே, ''திராவிட வேதமாகிய நம்மாழ்வாரின் திருவாய்மொழியையும் கீர்வாண வேதமாகிய தாய்

மொழியையும் ஒன்றென்றே அறிவுடையோர் ஆராய்ந்து கூறுவர். திருவாய்மொழியை வேதமென்று சங்கையற யாவருங் கொள்வர். சிலர் திருவாய்மொழியைப்போல் பலநூல்கள் உளவென்று பேதைமையாற் கூறுவர்; நானோ பிறநூல்கள் யாவும் திருவாய்மொழியின் சாயையிலே எழுதப்பட்டவை என்று உறுதியாய்க் கூறுவேன்' என்னும் பொருள்பட,

'சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ்
வாய்மொழியை யாரும் மறையென்ப—வாய்மொழிபோல்
ஆய்மொழிகள் சாலஉள வெனினும் அம்மொழியின்
சாய்மொழி யென்பேன்யான் தகைத்து'

என்று கூறினர்.

நான்கு வேதங்களிலும் உபநிடதங்களிலும் பொதிந்துகிடக்கும் அரும்பொருளை மாந்தர்க்குத் தமது அமிழ்தினுமினிய செந்தமிழ்ப் பாடல்களால் மாந்தர்க்கு உதவிய இப் பெரியாரின் பெருமையை என்னென்று வியப்பது! மேற் காட்டியவாறு சடகோபர் விஷயமாகப் புலவர்கள் பாடிய செய்யுட்களும் பிரபந்தங்களும் பலவாம்.

மேலும் அவருடைய மகிமையை விளக்க ஒரு கதையும் வழங்கி வருகின்றது. ஒருகாலத்தில் தாமிரபரணி நதியின் வடகரையில் யோகி ஒருவர் வசித்து வந்தார். அவர் ஒரு நாயை வளர்த்து வந்தார். அது தினந்தோறும் அந் நதிக்குத் தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குச் சென்று வைணவர் உண்டு கழித்த சேடத்தைத் தின்று வருவது வழக்கம். அப்படியிருக்க, ஒருநாள் திருநகரிக்குச் சென்ற நாய் திரும்பிவர நேரமாயிற்று. யோகியார் வெகுநேரங்

காத்திருந்தும் தமது நாய் வராததைக் கண்டு வருந்தி அதைத் தேடிக்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தார். அவருடைய நாய் நட்டாற்றில் வந்துகொண்டிருத்தலை அவர் கண்டார். அப்போது திடீரென்று வெள்ளம் வந்துவிட, நாய் அவ் வெள்ளத்தினின்றும் தப்ப முடியாமல் நீரில் மூழ்கிக் கிளம்பியது. அச்சமயத்தில் அதன் மண்டை வெடித்தது. அதனின்றும் உண்டான துவாரத்தின் வழியாக நாயின் ஆத்மாவானது ஜோதிமயமாய்க் கிளம்பி கண்ணைப் பறிக்கும் காந்தியுடன் மேலே சென்றது. அவ் வற்புதக் காட்சியைக் கண்ட யோகி அதிசயித்து, 'இந்த நாய் பெற்ற பேறு தான் என்னே! தவசிகளும் யோகிகளும் ஞானிகளும் காணமுடியாத பெரும் பதவியை இவ் வற்பப் பிராணி எளிதிற் பெற்றதே! இது பெற்ற புண்ணியத்திற் கடுகளவேனும் நான் பெற்றிலேனே! ஆழ்வார் அவதரித்த திருநகரியிற் கிடைத்த பாகவத சேஷத்தை யுட்கொண்ட நாயே பெறற்கரிய பெரும்பேற்றினை யடைந்ததென்றால் மாறனின் பெருமையை என்னென்று வியப்பது!' என்று கதறி யழுது,

"வாய்க்குங் குருகைத் திருவீதி யெச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரம பதமளித் தாயந்த நாயொடிந்தப்
பேய்க்கும் இடமளித் தாற்பழு தோபெரு மான்மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே"

என்று தொடங்கிப் பல பாடல்களால் ஆழ்வாரைத் துதித்து நற்கதி பெற்றார்.

Printed at the Caxton Press, Madras—1923. (A)

## பக்த சிரோன்மணிகள் சரித்திரச் சுருக்கம்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| திருநாவுக்கரசர் ... ... ... | 0 | 1 | 0 |
| சுந்தரமூர்த்திகள் ... ... ... | 0 | 1 | 0 |
| சம்பந்தர் ... ... ... .. | 0 | 2 | 0 |
| மாணிக்கவாசகர் ... ... ... | 0 | 2 | 0 |
| இராமானுஜர் ... ... ... | 0 | 1 | 0 |
| சங்கராசாரியார் .. ... ... | 0 | 4 | 0 |
| மார்க்கண்டேயர் ... ... ... | 0 | 2 | 6 |
| தாயுமானவர் ... ... .. | 0 | 1 | 0 |
| திருவெண்காடர் ... ... ... | 0 | 4 | 0 |
| நந்தனார் ... ... ... ... | (அச்சில்) | | |
| திருமங்கை மன்னன் ... ... ... | ,, | | |
| குலசேகரன் ... ... ... | ,, | | |
| திருப்பாணாழ்வார் ... ... ... | ,, | | |
| மதுரைகவிகள் ... ... ... | ,, | | |
| தொண்டரடிப்பொடி ஆழ்வார் ... ... | ,, | | |
| ஸ்ரீமந்நாத முனிகள் ... ... ... | ,, | | |

## T. A. ஸ்வாமிநாத ஐயர்

எழுதிய

## நீதிபோதக் கிரந்த மாலை

(சித்திரப் படங்க ளமைந்தது)

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. விவேக சந்திரிகை (முதற் பாகம்) ... | 0 | 7 | 0 |
| 2. விவேக சந்திரிகை (இரண்டாம் பாகம்) | 0 | 8 | 0 |
| 3. விவேக சந்திரிகை (மூன்றும் பாகம்) ... | 0 | 12 | 0 |

## கலிவர் யாத்திரைகள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. லிலிபுட் யாத்திரை ... ... | 0 | 5 | 0 |
| 2. லபுடா யாத்திரை ... ... | 0 | 4 | 0 |
| 3. பிராப்டிங்ஞக் யாத்திரை ... ... | 0 | 6 | 0 |
| 4. ஹூவ்ஹூரின் ஹின்ம் யாத்திரை ... | (அச்சில்) | | |